**சார்பு நீதிமன்றம், போளூர்**

**முன்னிலை– திரு. S.செந்தில்பாபு, எம்.ஏ.எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, போளூர்,**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20–ஆம் நாள் திங்கட்கிழமை**

**O.S.No:230/2023**

**CNR No.TNTM22-000914-2023**

சண்முகம் ... வாதி

//எதிர்//

காசி ...பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.மகேந்திரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதியை ஒரு தலைபட்ச உத்தரவுக்கு உட்படுத்தியும் வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

வாதியின் அனுபவத்திற்கு பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ அல்லது அவரது உத்தரவு பெற்றவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர தடையுத்தரவு கோரியும், இவ்வழக்கிற்கான செலவு தொகையையும் வாதிக்கு பிரதிவாதி கொடுக்கப்பட வேண்டும் என்று இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வாதியின் வழக்குரை சுருக்கம்:–**

தாவா சொத்துக்கள் வாதியின் தந்தை ரங்கசாமி என்பவருக்கு பச்சியப்ப உடையார் என்பவர் 22.06.1915 தேதியிட்ட ஓர் பதிவு செய்த போக்கிய பத்திரம் முன்னிலைக்கு எழுதி பதிவு செய்து கொடுத்து தாவா சொத்துக்களை ஒப்படைத்து விட்டார். மேற்படி போக்கிய பத்திரத்தை உரிய காலத்தில் மீட்காமல் போகவே, வாதியின் தந்தை ரங்கசாமி என்பவர் தொடர்ந்து எவ்வித இடையூறுமின்றி 12 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்துக்களை ஆண்டு அனுபவித்து வந்து கடந்த 25.07.1994 தேதியில் மேற்படி ரங்கசாமி என்பவர் இறந்துவிட்டார். மேற்படி இறந்துவிட்ட ரங்கசாமி என்பவருக்கு வாதி மற்றும் கஸ்தூரி மற்றும் லலிதா என்பவர்கள் வாரிசுதாரர்கள். மேற்படி கஸ்தூரி மற்றும்

லலிதா என்பவர்கள் இறந்துவிட்ட நிலையில் வாதி மட்டுமே மேற்படி தாவா சொத்துக்களை தொடர்ந்து ஆண்டு அனுபவித்து வருகிறார். வாதி தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்பதற்கு ஆதாரமாக பட்டா எண்.292 க்கு மேற்படி அடிப்படையில் வாதி தாவா சொத்திற்கு வரி ரசீது செலுத்தி வருகிறார். அனுபவ உரிமை அடிப்படையில் தாவா சொத்து வாதிக்கு சொந்தமாகிவிட்டது. மேலும் தாவா சொத்திற்குண்டான அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய தீர்வை செலுத்தி வாதி அனுபவித்து வருகிறார். இந்நிலையில் இப்பிரதிவாதிக்கும் தாவா சொத்திற்கும் எவ்வித உரிமையோ சம்மந்தமோ இல்லை. பிரதிவாதி மூன்றாம் நபர் என்ற முறையில் தவறுதலாக வருவாய்துறையில் பூம கவுண்டர் மகன் காசி என உள்ளதை தனக்கு சாதகமாய் பயன்படுத்தி கொண்டு பிரதிவாதியும் அவரது ஆட்களும் அடிக்கடி தாவா சொத்தில் அத்துமீறி பிரவேசித்து வாதியின் அனுபவத்தில் உள்ள பட்ட இடத்தில் எவ்வித அனுமதியும் இல்லாமல் அத்துமீறி பிரவேசிக்க முயற்சித்தனர். வாதியின் அமைதியான அனுபவத்தை தடை செய்யக்கூடாது என நிரந்தர தடை உத்தரவு வேண்டி வாதியானவர் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்.

3) பிரதிவாதி 15.11.2024 அன்று இந்நீதிமன்றத்தில் அழைத்தும் அஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

4) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் வழக்கு அனுமதிக்கத்தக்கதா ?

5) வாதி தரப்பில் வாதி திரு.சண்முகம் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வ.சா.ஆ.1 முதல் வ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பில் திரு.கன்னியப்பன் என்பவர் வா.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதி தரப்பில் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. வாதி தரப்பில் வாதம் கேட்கப்பட்டது.

<u>**தீர்வு:—**</u>

6) வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதி தரப்பு சாட்சிய சான்றாவணங்களை அனுசரித்து வாதியின் வழக்கை அனுமதிக்கும்படி வாதுரை செய்தார்.

7) வாதித் தரப்பு வழக்கை நிரூபிக்கும் முகமாக வாதி வா.சா.1 ஆக சாட்சியமளிக்கும்போது, தாவா சொத்துக்கள் வாதியின் தந்தை ரங்கசாமி என்பவருக்கு பச்சியப்ப உடையார் என்பவர் 22.06.1915 தேதியிட்ட ஓர் பதிவு

செய்த போக்கிய பத்திரம் முன்னிலைக்கு எழுதி பதிவு செய்து கொடுத்து தாவா சொத்துக்களை ஒப்படைத்து விட்டார் என சாட்சியம் அளித்து மேற்படி சங்கதிகளை நிரூபிக்கும் முகமாக 22.02.1914 தேதியிட்ட போக்கிய பத்திர சான்று நகல் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யபட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தை பரிசீலிக்கையில் தாவா சொத்துக்களை பிரதிவாதி வாதியின் தந்தை பெயருக்கு போக்கிய முன்னிலைக்கு எழுதிக்கொடுத்தார் என்பது தெரியவருகிறது. மேலும், வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை பரிசீலிக்கையில் மேற்படி போக்கிய பத்திரத்தை உரிய காலத்தில் மீட்காமல் போகவே, வாதியின் தந்தை ரங்கசாமி என்பவர் தொடர்ந்து எவ்வித இடையூறுமின்றி 12 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்துக்களை ஆண்டு அனுபவித்து வந்து கடந்த 25.07.1994 தேதியில் மேற்படி ரங்கசாமி என்பவர் இறந்துவிட்டார் என்பதும், மேற்படி இறந்துவிட்ட ரங்கசாமி என்பவருக்கு வாதி மற்றும் கஸ்தூரி மற்றும் லலிதா என்பவர்கள் வாரிசுதாரர்கள் என்பதும், மேற்படி கஸ்தூரி மற்றும் லலிதா என்பவர்கள் இறந்துவிட்ட நிலையில் வாதி மட்டுமே மேற்படி தாவா சொத்துக்களை தொடர்ந்து ஆண்டு அனுபவித்து வருகிறார் என்பது தெரியவருகிறது. வாதி தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார் என்பதற்கு ஆதாரமாக பட்டா எண்.292 க்கு மேற்படி அடிப்படையில் வாதி தாவா சொத்திற்கு வரி ரசீது செலுத்தி வருகிறார் என்பதும் அறிந்துக்கொள்ள முடிகிறது. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 யை பரிசீலிக்கையில் தாவா சொத்திற்குண்டான பட்டா பிரதிவாதி பெயரில் உள்ளதால் வாதி போளூர் வட்டாச்சியர் அவர்களிடமும், கோட்டாச்சியர் ஆரணி அவர்களிடமும், மேற்படி தாவா சொத்திற்குண்டான பட்டாவில் பூம கவுண்டர் மகன் காசி என்பவரின் பெயரை நீக்கரவு செய்ய வேண்டி மனு கொத்துள்ளார் என்பது தெரியவருகிறது.

8) இந்நிலையில் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தன் தரப்பு ஆட்சேபனையை எழுப்பவில்லை என்பதால் வழக்குரைச் சங்கதிகளை பிரதிவாதி உட்கிடையாக ஒப்புக்கொண்டுள்ளார் என்பது மட்டுமல்லாமல் வாதி தன் தரப்பு வழக்கை சாட்சிய சான்றாவணங்களில் மூலம் நிரூபித்துள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், தாவா சொத்தில் சிறிதும் உரிமையில்லாத நிலையில் பிரதிவாதி தாவா சொத்துக்களில் வாதியின் அனுபவத்தை தடைசெய்ய முயற்சித்தார் என வாதி தெரிவித்துள்ள நிலையில், வாதி கோரியதுபோல் தாவா சொத்துக்களின் உரிமை பொறுத்து பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற தகுதியானவர் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு வாதியின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, உறவினர்களோ அல்லது முகவர்களோ அத்துமீறி நுழைந்து வாதியின் அனுபவத்தை தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகின்றது. இவ்வழக்கிற்கான செலவு தொகையை பிரதிவாதி செலுத்தப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகின்றது.

இத்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 20.04.2026 தேதியன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SENTHILBABU Digitally signed by S SENTHILBABU Date: 2026.04.20 17:55:51 +0530

**சார்பு நீதிபதி,**
**போளூர்.**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:</u> –**

வா.சா.1– திரு. சண்முகம்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | 22.06.1915 | – | போக்கிய பத்திர சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | – | -- | – | 1914 முதல் 2023 வரையிலான வில்லங்க சான்றுகள் நகல் |
| வா.சா.ஆ.3 | – | 06.12.2004 | – | ரங்கசாமி என்பவரின் இறப்பு சான்று நகல் |
| வா.சா.ஆ.4 | – | -- | – | பட்டா எண்.292 கணினி பட்டா நகல் |
| வா.சா.ஆ.5 | – | 11.01.2003 | – | வாதி வட்டாச்சியருக்கு கொடுத்த புகார் மனு நகல் |
| வா.சா.ஆ.6 | – | 10.05.2023 | – | வாதி கோட்டாச்சியருக்கு கொடுத்த புகார் மனு நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை

S SENTHILBABU Digitally signed by S SENTHILBABU Date: 2026.04.20 17:55:57 +0530

**சார்பு நீதிபதி,**
**போளூர்.**